# வானிலை சார்ந்த வேளாண் ஆலோசனை அறிக்கை

இணைந்து வழங்குபவர்கள்
பிராந்திய வானிலை மையம் சென்னை - இந்திய வானிலைத் துறை
ம. சா. சுவாமிநாதன் ஆராய்ச்சி நிறுவனம் மற்றும்
ரெட்டியார்சத்திரம் விதை உற்பத்தியாளர்கள் சங்கம்

| மாவட்டம் : | சிவகங்கை | காலம் : | 31/12/2022 | முதல் | 04/01/2023 |
|---|---|---|---|---|---|
| அறிக்கை எண் : | 104/ 2022 | வெளியீட்டு நாள் : | 30/12/2022 | | |

## சிவகங்கை மாவட்டத்தின் கடந்த வார வானிலை

பெரும்பாலான பகுதிகளில் அதிகபட்ச வெப்பநிலை 31° - 34° செல்சியஸ் ஆகவும், குறைந்தபட்ச வெப்பநிலை 22°-24° செல்சியஸ் ஆகவும் பதிவானது. மேலும் மழை பெறப்பட்டது.

| கடந்தவார வானிலை (25.12.2022 முதல் 29.12.2022) | | | | | | அடுத்த ஐந்து நாட்களுக்கான வானிலை முன்னறிவிப்பு –04-01-2023- 08.30 வரை | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| 25/12 | 26/12 | 27/12 | 28/12 | 29/12 | தேதி | நாள்-4 31/12 | நாள்-5 01/01 | நாள்-5 02/01 | நாள்-4 03/01 | நாள்-5 04/01 |
| 0.0 | 8.3 | 8.6 | 0.0 | 0.0 | மழை (மி.மீ) | 2 | 0 | 2 | 0 | 2 |
| 34 | 34 | 31 | 32 | 32 | அதிக பட்ச வெப்பநிலை (செல்) | 32 | 32 | 33 | 33 | 34 |
| 24 | 24 | 23 | 24 | 22 | குறைந்த பட்ச வெப்பநிலை (செல்) | 21 | 22 | 22 | 23 | 23 |
| 6 | 5 | 6 | 5 | 3 | மேக மூட்டம் (ஆக்டா) | 1 | 2 | 2 | 2 | 2 |
| 66 | 89 | 94 | 80 | 82 | அதிக மற்றும் குறைந்த பட்ச காற்றின் ஈரப்பதம் (சதவீதம்) | 90 | 90 | 90 | 90 | 90 |
| 70 | 69 | 65 | 55 | 57 | | 50 | 40 | 50 | 50 | 50 |
| 11 | 7 | 6 | 9 | 7 | காற்றின் வேகம் (கி.மீ/மணி ) | 4 | 6 | 10 | 6 | 12 |
| வட கிழக்கு | வட கிழக்கு | வட கிழக்கு | வட கிழக்கு | வட கிழக்கு | **காற்றின் திசை** | **வட கிழக்கு** | **வட கிழக்கு** | **வட கிழக்கு** | **வட கிழக்கு** | **வட கிழக்கு** |

**குறுஞ்செய்தி** :

மாவட்டத்தின் ஒரு சில இடங்களில் டிசம்பர் 31 தேதி, ஜனவரி 2 மற்றும் 4 தேதி மிக லேசான மழைக்கு வாய்ப்புள்ளது. அதிகபட்ச வெப்பநிலையானது 32°-34° செல்சியஸ் ஆகவும், குறைந்தபட்ச வெப்பநிலையானது 21°-23° செல்சியஸ் ஆகவும் பதிவாகலாம். வானம் தெளிவாக காணப்படும். மணிக்கு 4 முதல் 12 கி.மீ வேகத்தில், வடகிழக்கு திசையிலிருந்து காற்று வீசக்கூடும்.

அடுத்த 5 நாட்களுக்கு பெரும்பாலும் வறண்ட வானிலேயே நிலவ வாய்ப்பு உள்ளது. இந்த காலகட்டத்தில் விவசாயிகள் பயிர் பாதுகாப்பு நடவடிக்கைகளை மேற்கொள்ளலாம்.

## எதிர்பார்க்கப்படும் வானிலைக்கேற்ற வேளாண் ஆலோசனைகள்

**முக்கிய பயிர்கள்** : **கத்திரி**, **துவரை**, கால்நடை

**கத்திரி**:

❖ காய்கறிப் பயிர்களுக்கு நுண்ணூட்டம் உரமிடுதல் நல்ல பயனளிக்கும்.

- பூக்கும் மற்றும் காய்க்கும் பருவத்தில் உள்ள காய்கறி பயிர்களுக்கு நுண்ணூட்டத்தை நீர் பாசனம் வழி விடுதல் அல்லது இலை வழியாக தெளிக்கவும்.

**துவரை**:

- துவரைப் பயிரில் பூக்கள் உதிர்வது கட்டுப்படுத்த ஒரு ஏக்கருக்கு 2 கிலோ என்ற அளவில் பயிர் ஒண்டர் யினை 200 லிட்டர் தண்ணீரில் கலந்து தெளிக்க வேண்டும்.

கால்நடை:

- ஆடுகளை தாக்கும் துள்ளுமாரி நோய் பரவலாக தென்படுகின்றது.
- இந்நோய் எல்லா வயது ஆடுகளையும் பாதிக்கும். ஆனால் இளம் வயது ஆடுகளே இந்நோயால் பெரும்பாலும் பாதிக்கப்படுகின்றன.
- மழைக்குப்பின் புதிதாக முளைத்த பசுமையான புல்வெளியில் மேய்ச்சலுக்குச் செல்லும் ஆடுகளுக்கு இந்நோய் ஏற்படும்.
- இறப்பதற்கு முன் வலிப்பு ஏற்பட்டு துள்ளி விழும். இந்நோயிலிருந்து ஆடுகளை பாதுகாக்க சூரிய உதயத்திற்குப் பின் 1 மணி நேரம் கழித்து மேய்ச்சலுக்கு அனுப்ப வேண்டும்.
- அருகில் உள்ள கால்நடை மருத்துவரை அணுகி இந்நோய்க்கான தடுப்பூசியை போடுவது மிகவும் அவசியமாகும்.

.